தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986 ஏப்ரல் 28, திங்கட்கிழமை.

சித்திரை 15, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல் '',

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செய்தற்கரிய செயல்களைச் செய்ய வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

ஊராட்சிகளில் வரி வசூல்.

587—(*வினா எண். 7232) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சிகளில் வரி வசூல் செய்யும் பொறுப்பினை கிராம சேவகர்களிடம் ஒப்படைக்கும் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஊராட்சிகளில் வரி வசூல் செய்யும் பொறுப்பினை கிராம சேவகர்களிடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கான வரி வசூலை ரெவின்யூத் துறை அதிகாரிகள் செய்து வருகிற காரணத்தால், ஊராட்சி மன்றங்களுக்கான வருவாய் தானே என்கின்ற அளவில் அவர்கள் போதிய அக்கரை செலுத்துவதில்லை என்கிற புகார் அடிப்படையில், உண்மையான நிலை அப்படி இருக்குமானால் அதை கிராம சேவக்குகளிடம் ஒப்படைத்து, முழு அளவில் மாற்றுப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற கிராம அதிகாரிகளை நம்பியிராமல், ஊராட்சி மன்றங்களுக்கு வர வேண்டிய வசூலை வசூலிக்கின்ற வகையில், மாற்றுத் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1986 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற திட்டத்தில் எந்த வித குறைபாடும் இது வரையிலும் அரசுக்கு வரவில்லை. ஆனால் பொதுவாக ஏற்கனவே வருவாய்த் துறையைச் சார்ந்தவர்கள் ஊராட்சிமன்ற வரி வசூலில் கொஞ்சம் தயக்கம் காட்டியது என்பது உண்மை தான். யாரிடம் ஒப்படைக்கலாம் என்பது பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, இப்போது ஊராட்சிமன்றங்களிலே வேலை செய்கின்ற எழுத்தர்களை ஊராட்சிமன்றங்களிலே இருக்கின்ற வரிகளை எல்லாம் தண்ணீர் வரி, வீட்டு வரி, மனைவிலை வரி, போன்ற பணிகளை எல்லாம் அவர்களிடம் ஒப்படைத்து அவர்களை முழு நேர அரசு எழுத்தர்களாக அறிவிக்கின்ற செயற் திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ள செயற்குறிப்புகளில் இதுவும் ஒன்று.

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, பேரூராட்சிகளில் வரி வசூல் செய்வதற்கு பில் கலெக்டர்களை நியமிப்பது போல் ஊராட்சிகளுக்கும் இங்கே வரி வசூல் செய்ய அரசு பில் கலெக்டர்களை நியமிக்க ஆய்வு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, பகுதி நேர எழுத்தர் பணியிடங்களை தொகுதி எழுத்தர் மற்றும் வரி தண்டலர்கள் என்ற முழு நேரப் பணியிடமாக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வாங்கப்படும் எருமை மாடுகள்.

588—(*வினா எண் 7351) திரு. க. வெ. வீரானம்பலம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின்கீழ் (I.R.D.P.) பால் எருமைகள் வாங்கி பயன் அடைபவர்கள் சொந்த மாவட்டத்தில் மட்டும் வாங்க வேண்டுமென அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தற்போதுள்ள நடைமுறையின்படி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின்கீழ் நல்ல தரமான கறவை மாடுகள் எங்கெல்லாம் கிடைக்கிறதோ,